**1971 டிசம்பர் 14]**

பணி, 1961-இல் தொடங்கப்பட்டது. அங்கு கீழ்க்கண்ட மூலவகை இணைகளைக் கொண்டு அவற்றுக்கிடையே ஒட்டுச் செய்யப்பட்டது. அவையாவன :—

தாசரி × நீலம் ; நீலம் × தாசரி

நீலம் × லங்கா ; தாசரி × தோதபுரி சிவப்பு சிறியது.

தாசரி × பங்களூரா, செளஸா × நீலம்

நீலம் × செளஸா.

இந்த இணைகளின் ஒட்டு மரங்கள் 1968-இல் கனிகள் ஈந்தன. இவற்றில் பின் வரும் மூலவகை இணைகள் நான்கிலிருந்து கிடைத்த ஒட்டுவகைகள், காயின் தரத்திலும் வழக்கமாய் கிடைக்கும் பலன் அளவிலும் சிறப்பாகவுள்ளனவென்று தெரிவிக்கப்படுகின்றது. அவையாவன:—

தாசரி × நீலம் ; நீலம் × தாசரி

நீலம் × செளஸா, தாசரி × தோதபுரி.

இந்த ஒட்டுவகைகளின் பலன்கள் பரிசோதனையில் உள்ளன.

**Thiru K. S. KOTHANDARAMIAH :** Sir, about four or five months ago I read in a North Indian News Paper. "The Patriot" about it and details had been given in it. Now I do not have the details about it. So, May, I know from the Hon. Minister whether such seedlings would be what is the exact name of the cross bread?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இவ்வளவு நேரம் சொன்னதே ஒட்டு இனத்தைப் பற்றித்தான். பெரியகுளத்தில் செய்யப்படும் கே.ஓ. 8, கே.ஓ. 22, தஞ்சையில் பாதிரி, சேலத்தில் சேலம் பங்களூரா, வரகம்பாடி குண்டு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நாட்டில் உள்ள வகைகளைப் பற்றியெல்லாம் கேட்கப்படவில்லை. சென்னை, சேலம் ஒட்டு இனத்தைப்பற்றித்தான் கேட்டார்கள். அதற்குமட்டும் பதில் சொன்னால் போதும். அது சொல்லியாகிவிட்டது.

### தீவிர கரும்பு சாகுபடித் திட்டம்.

*384 வினா—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீவிர. கரும்பு உற்பத்தித் திட்டத்துக்காகச் சில பகுதிகளை அரசு தேர்ந்தெடுத்துள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பகுதிகளை அரசு தேர்ந்தெடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) ஆம்.

(இ) கரும்பு தீவிர சாகுபடி திட்டத்தைச் செயல்படுத்த கீழ்க்கண்ட சர்க்கரை ஆலைப்பகுதிகளை அரசு தேர்ந்தெடுத்து திட்டம் செயல்பட்டு வருகிறது:—

(1) மதுராந்தகம் சர்க்கரை ஆலைப்பகுதி.
1. செங்கல்பட்டு.
2. வந்தவாசி.

(2) ஆம்பூர் சர்க்கரை ஆலைப்பகுதி.
1. வாணியம்பாடி.
2. பெர்ணாம்பட்டு.

(3) முண்டியம்பாக்கம் சர்க்கரை ஆலைப்பகுதி.
1. வளவனூர்.
2. விக்ரவாண்டி.

(4) பெண்ணாடம் சர்க்கரை ஆலைப்பகுதி.
1. சேத்தியாதோப்பு.
2. திட்டகுடி.

(5) வடபாதிமங்கலம் சர்க்கரை ஆலைப்பகுதி.
1. மன்னார்குடி.
2. கொடவாசல்.

(6 ஆப்பகூடல் சர்க்கரை ஆலைப்பகுதி.
1. அந்தியூர்.
2. பவானி.

(7) அலங்காநல்லூர் சர்க்கரை ஆலைப்பகுதி.
1. மேலூர்.
2. அலங்காநல்லூர்.

(8) புகலூர் சர்க்கரை ஆலைப்பகுதி.
1. கொடுமுடி.
2. வேலாயுதம்பாளையம்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, இந்தக் கரும்பு தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் பல புதிய கரும்பு விதைகளைக் கண்டு பிடித்திருப்பதாகச் சொன்னார்கள். அப்படி இருந்தால் அவைகள் எந்த எந்த பகுதிகளில் பயிரிடப்படுகின்றன, அதிகப் பயன் தருகின்றனவா . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தீவிர கரும்பு சாகுபடித் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளைப் பற்றியதுதான் மூலக்கேள்வி. எனவே, துணைக்கேள்விகள் அதையொட்டித்தான் இருக்க வேண்டும். அப்படி இல்லாததால் இந்தக் கேள்விக்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

*1971 டிசம்பர் 14]*

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister whether Palakcode is included in the scheme of package production of sugar-cane?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், இந்தக் கரும்பு தீவிர சாகுபடித் திட்டத்தைத் தீவிரப்படுத்த விவசாயிகளுக்கு என்னென்ன சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

திரு. ஏ. சி. நரசிம்மன்: தலைவரவர்களே, ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கிற சர்க்கரை ஆலைகளுக்குத்தான் இந்த இன்டென்சிவ் ஸ்கிம் இருக்கிறது. புதிதாக அமைக்கப்படுகிற கரும்பாலைகள் இந்த ஸ்கிமில் சேர்க்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் இத்திட்டம் மேலும் 5 சர்க்கரை ஆலைப் பகுதிகளில் செயல்படுத்தி மேலும் 20,000 ஏக்கரை இத்திட்டத்தின் கிழ்க் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது. அமராவதி சர்க்கரை ஆலைப் பகுதியில் 4,000 ஏக்கரில் திட்டத்தை செயல்படுத்த ஒரு கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும் 1972-73-வது ஆண்டில் கரும்பு தீவிர சாகுபடி திட்டத்தை மோஹனூர், பேட்டவாய்த்தலை சர்க்கரை ஆலைப் பகுதிகளில் செயல்படுத்த யோசனை உள்ளது. மற்ற இரண்டு திட்டப் பிரிவுகள் 1973-74-வது ஆண்டில் செயல்படுத்தக் கருதி உள்ளது.

திரு. அ. ஆறுமுகம்: தலைவரவர்களே, சேலம் மாவட்டத்திலுள்ள மோகனூர் சர்க்கரை ஆலை இந்தத் சாகுபடி திட்டத்தின் கீழ் வரவில்லையே. அது எப்பொழுது எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இப்போதுதான் சொன்னேன், 1972-73-வது ஆண்டில் கரும்பு தீவிர சாகுபடித் திட்டத்தை மோகனூர், பேட்டவாய்த்தலை சர்க்கரை ஆலைப் பகுதிகளில் செயல்படுத்த யோசனை உள்ளதாக. மற்றப் பகுதிகள் 1973-74-வது ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ந. நாச்சியப்பன் : தலைவரவர்களே, கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலை இந்தத் தீவிர சாகுபடி திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இன்னும் இல்லை.

**திரு. சோ. கருணாநிதன் :** தலைவரவர்களே, தேர்ந்தெடுக்கப் பட்டப் பகுதிகளைப் பற்றி அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். மொத்தம் எத்தனை ஏக்கர் இந்தத் திட்டத்தில் அடங்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, ஒவ்வொரு ஆலைப் பகுதியிலும் 4,000 ஏக்கர் வீதத்தில் கரும்பு முனைப்புத் திட்டத்தின் கீழ் பயிராகும் மொத்தப் பரப்பளவு 32,000 ஏக்கராகும்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, இந்தத் தீவிர கரும்பு சாகுபடித் திட்டத்தின்கீழ் கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் பிற மாநிலங்களில் கரும்புக்கு அதிக விலை கொடுக்கப்படுகிறது. நமது மாநிலத்தில் பிற மாநிலங்களைவிட குறைவாகக் கொடுக்கப்படுகிறது. எனவே, நம் மாநிலத்திலும் கரும்பின் விலையை அதிகரிக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, இன்னும் அது பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை.

**நவ்லாக் வேளாண்மைப் பண்ணை**

*1385 **வினா—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராணிப்பேட்டை அருகில் உள்ள நவ்லாக் விவசாயப் பண்ணையை விரிவுபடுத்தும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) ஆம்.

(இ) நவ்லாக் விவசாயப் பண்ணையில் முதன்மையான விதைகள் பயிரிட பண்ணையை விரிவு படுத்துவதற்காக மேலும் 524.16 ஏக்கரா நிலம் தமிழ் நாடு இயங்கா உடைமைகளைக் கேட்டுப் பெறுதல்—கையகப்படுத்தல் சட்டத்தின் கீழ் கைப்பற்றும்படி ஆணையிடப்பட்டுள்ளது.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவரவர்களே, அந்த இடம் ஒரு தனியாரிடம் இருப்பதால், அதைப் பெறுவதில் சிரமம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதுபோல் இன்னும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் இருப்பதால், அவற்றை விவசாயத்திற்கு எடுத்துக் கொள்ளவும், நவ்லாக் விவசாயப் பண்ணையில் ஒரு ஆராய்ச்சிக் கல்லூரியை ஏற்படுத்தவும் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இன்னும் இடமே கையகப்படுத்தப்படவில்லை. அதற்குள் மற்றவர்களைப் பற்றிச் இப்போது சொல்வது அவசியமில்லாதது. இருந்தாலும் தனியாருக்குச் சொந்தமான நிலத்தை எடுத்துக்கொள்ள ஆணை பிறப்